# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

<u>(அறிக்கை எண். த.மி.ஒ.ஆ /SC/ 7 /10, 31. 07. 2008 நாளிட்டது)</u>

<u>(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)</u>

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பினைக் குறித்துரைத்துள்ளது என்பதாலும் மற்றும் அதனை 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் நிலுவைத் தொகைகளை வசூலித்தல், மின் வழங்கலைத் துண்டித்தல், முதலியவை தொடர்பாக, தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிற்குத் திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அத்தகைய திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வரையறைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு ஏற்றுக் கொள்ளப்படலாகிறது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 50ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவினால் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன் மூலம், தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிற்கு பின்வரும் திருத்தத்தைக் குறித்துரைக்கிறது , அதாவது : -

<u>1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்</u> : -

(a) இந்த விதித் தொகுப்பு, 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(b) இது, தமிழ்நாடு அரசிதழில், அது வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

2. <u>தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பின் 17ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல் </u>: -

தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பின் 17ஆம் ஒழுங்குமுறை விதியில், (7)ஆம் உள்– ஒழுங்குமுறை விதிக்குப் பின்பு, பின்வரும் உள் – ஒழுங்குமுறை விதி சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது : -

(8) நுகர்வோர் எவரும் ஒன்றுக்கு மேற்பட்ட மின்னிணைப்பு பெற்றிருக்கிறவிடத்து, அவர் மின்னிணைப்புகளில் எவையேனும் ஒன்று தொடர்பான நிலுவைத்தொகையினை செலுத்தத் தவறுவாரானால், உரிமம்தாரர், மின்னிணைப்புகள் தனிப்பட்ட இசைவுப் பத்திரங்களின் கீழ் உள்ளடங்கி இருந்தபோதிலும், அனைத்து மின்னிணைப்புகளுக்கான நிலுவைத் தொகைகள் அனைத்தையும் செலுத்தும் வரையில், உரிய அறிவிப்பு கொடுத்து, நுகர்வோரின் பெயரிலுள்ள பிற மின்னிணைப்புகள் துண்டிக்கப்படுமாறு செய்யலாம்.

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி )**

**இரா. பாலசுப்பிரமணியன்**
செயலாளர்